# கரூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் 2017– 18 நிதியாண்டிற்கான ஆண்டறிக்கை

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017ன்படி கரூர் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண்.ந.க.எண்.910/கனிமம்/2017 நாள்.06.09.2017ன்படி கரூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அறக்கட்டளைப் பத்திரமானது 06.09.2017 அன்று தயார் செய்யப்பட்டு, ஆவண எண்.7/BK4/2017 நாள்.08.09.2017ன்படி கரூர் இணை–1 சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | நிர்வாகக் குழு அமைப்பு | வ. எண் | மேலாண்மைக் குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சித் தலைவர், கரூர் | 1 | மாவட்ட ஆட்சித் தலைவர், கரூர் |
| 2 | மாவட்ட வருவாய் அலுவலர், கரூர் | 2 | மாவட்ட வருவாய் அலுவலர், கரூர் |
| 3 | துணை இயக்குநர்(கனிமம்),கரூர். | 3 | துணை இயக்குநர்(கனிமம்),கரூர். |
| 4 | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கரூர். | 4 | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கரூர். |
| 5 | துணை இயக்குநர், மாவட்ட சுகாதாரத்துறை கரூர். | 5 | நேர்முக உதவியாளர்(பஞ்சாயத்து), கரூர் |
| 6 | மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் | 6 | உதவி இயக்குநர்-ஊராக வளர்ச்சி துறை, கரூர். |
| 7 | மாவட்ட கருவூல அலுவலர், கரூர். | 7 | மாவட்ட ஆதி திராவிட நலத்துறை அலுவலர்,கரூர். |
| 8 | மாவட்ட சமூக நலத்துறை, கரூர். | 8 | மாவட்ட சுற்றுச்சூழல் செயற் பொறியாளர்(மாசு கட்டுப்பாட்டு வாரியம்) கரூர். |
| 9 | உதவி இயக்குநர் (பஞ்சாயத்து), கரூர் | 9 | மாவட்ட வன அலுவலர், கரூர். |
| 10 | தலைவர், இன்ப சேவா சங்கம், கடவூர். | 10 | செயற் பொறியாளர், பொதுப்பணித்துறை, நீ.வ.ஆ.அ, திருச்சி கோட்டம். |
| 11 | திரு.தர்மாராஜ், உதவி ஆட்சித்தலைவர், அலுவலர் அல்லாதவர். | 11 | உதவி இயக்குநர் நில அளவைத்துறை, கரூர் |

| | | | |
|---|---|---|---|
| | | 12 | மாவட்ட கருவூல அலுவலர், கரூர். |
| | | 13 | மாவட்ட சமூக நலத்துறை, கரூர். |
| | | 14 | துணை இயக்குநர், மாவட்ட சுகாதாரத்துறை கரூர். |
| | | 15 | வருவாய் கோட்ட அலுவலர், கரூர். |
| | | 16 | வருவாய் கோட்ட அலுவலர், குளித்தலை. |

கரூர் மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக கரூர் மாவட்ட பாரத மாநில வங்கியில் ஒரு வங்கிக் கணக்கு (கணக்கு எண்.37179997507) துவக்கப்பட்டு சிறு மற்றும் பெருங்கனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம கட்டமைப்பிற்கான நிதி வசூலிக்கப்பட்டுக் கொண்டு வருகிறது.

கரூர் மாவட்டத்தில் ஒரு பெருங்கனிம சுரங்கக் குத்தகை உரிமமும் 152 சிறு கனிம குவாரி குத்தகை உரிமங்களும் நடப்பிலுள்ளன. நடப்பிலுள்ள ஒரு பெருங்கனிம உரிமத்திற்கு 12.01.2015க்கு முன்னார் வழங்கப்பட்டவையாதலால் அவற்றிற்கு உரிம கட்டணத்தில் 30% தொகையானது கனிம அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்படுகிறது. மேலும் நடப்பிலுள்ள 152 சிறு கனிம குவாரி குத்தகை உரிமங்களில் 27 குவாரி குத்தகை உரிமங்களுக்கு உரிமக் கட்டணத்தில் 30% தொகையும், மீதமுள்ள 125 குவாரி குத்தகை உரிமங்களுக்கு உரிமக் கட்டணத்தில் 10% தொகையும் கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

கரூர் மாவட்டத்தில் 34 கிராம ஊராட்சிகள் சுரங்கப்பணிகளால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளன.

கரூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக 31.03.2018 வரை ரூ.6,63,37,593/– (ரூபாய் ஆறு கோடியே அறுபத்து மூன்று இலட்சத்து முப்பத்து ஏழாயிரத்து ஐநூற்று தொண்ணூற்று மூன்று மட்டும்) வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கிகணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

2017–18 ஆம் நிதியாண்டில் கரூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை மூலமாக எந்தத் திட்டங்களுக்கும் நிர்வாக ஒப்புதல் ஏதும் வழங்கப்படவில்லை.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பு (ரூபாயில்) | நடைமுறைப் படுத்தும் அமைப்பு | உயர் முன்னுரிமை / பிற முன்னுரிமைத் திட்டம் |
|---|---|---|---|---|---|
| ஏதுமில்லை | | | | | |

திட்டங்கள் எதற்கும் நிர்வாக ஒப்புதல் வழங்கப்படாததாலும் தொகை ஏதும் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்படாததாலும் 2017–18 ஆம் ஆண்டிற்கான கணக்குத் தணிக்கை ஏதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

30.06.18.

தலைவர்,
கரூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை
மற்றும்
மாவட்ட ஆட்சியர், கரூர்.

30/6/18